1979 பிப்ரவரி 14]

3. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) முதலமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள்...... (— குறுக்கீடு சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

நான் வாசிக்க ஆரம்பித்து விட்டேன். அனுமதிக்க முடியாது உட்காருங்கள்.

நேற்றைய தினம் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்பினார். ஆளுநர் உரை அன்று சில எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தது குறித்துப் பத்திரிகை நிருபர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பேட்டியில் குறிப்பிட்ட சில கருத்துக்களைப் பற்றியது இந்த உரிமை மீறல் பிரச்சினை. இப்பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் அவையில் எழுப்பியபோது, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டதுபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கவில்லை என்று விளக்கமாகக் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பிரச்சினையில் அவை உரிமை மீறிய செயல் எதுவும் இல்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாங்கள் தந்த தீர்ப்புக்கு மறுப்பு அல்ல, தாங்கள் தந்த தீர்ப்பில், 'திரு. சுப்பு அவர்கள் சொன்னதுபோல் முதல் அமைச்சர் பேசவில்லை, கருத்து தெரிவிக்கவில்லை' என்பதுபோல் வாசகம் எழுதியிருக்கிறீர்கள். அது திரு. சுப்பு அவர்கள் கருத்தல்ல. 'மெயில்' பத்திரிகையிலே வந்ததைத் திரு. சுப்பு அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, 'மெயில் பத்திரிகையிலே வந்ததைப்போல்' என்றிருக்க வேண்டும். எனவே, 'திரு. சுப்பு அவர்கள் சொன்னதுபோல்' என்றிருப்பது முறையல்ல.

திரு. க. சுப்பு : நான் 'மெயில்' பத்திரிகையைத் தங்களிடம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'மெயில்' பத்திரிகையை என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். அதைத்தான் நானும் சொல்கிறேன்..........

திரு. மு. கருணாநிதி : தங்கள் தீர்ப்பிலேதான் சந்தேகம் எழுகிறது, எனவே மீண்டும் ஒருமுறை படித்தால் நலமாக இருக்கும்,

[1979 பிப்ரவரி 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய தினம் பேரவையில் மாண்புமிகுஉறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்பினார். ஆளுநர் உரை அன்று சில எதிர்க் கட்சிகள் வெளிநடப்புச் செய்தது குறித்துப் பத்திரிகை நிருபர் களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பேட்டியில் குறிப்பிட்ட சில கருத்துக்களைப் பற்றியது இந்த உரிமை மீறல் பிரச்சினை. இப்பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் அவையில் எழுப்பியபோது மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டதுபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கவில்லை என்று விளக்கமாகக் குறிப்பிட்டார்கள்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இப்போதுதான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுப்பிய சந்தேகம் வலுவடை கிறது. திரு. சுப்பு அவர்கள் மெயில் பத்திரிகையிலே வந்த கருத் தைத் தெரிவித்திருக்கிறார்கள். அது சுப்பு கருத்தல்ல. மெயில் பத்திரிகையிலே வந்ததைப்போல்' என்றிருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. சுப்பு சொல்கிறார்: 'The statement that the present ruling party staged a walk out when it was in the opposition boycotting the Governor's Address was far from the truth. Never did it stage such a walk out in the Assembly. To make things worse the Chief Minister has also stated that chappals were thrown at AIADMK benches when they walked out by the then ruling party.' என்றுதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் படித்தேன்,

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது பெரிய விவாதத்திற்குரிய பிரச்சனை அல்ல. கொஞ்சம் தெளிவு ஏற்படுத்துவதற்காக ஒரு சொற்றொடரை அதிலே இணைத்துக் கொள்ளலாம். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னது போல் மாற்றிவிட்டால் பிரச்சினை முடிந்துவிடும். நீங்கள் படிக்க, அவர்கள் விளக்கம் சொல்ல, அதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல, பிறகு நான் எழுந்து பதில் சொல்ல என்ற நிலை வேண் டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுப்பு அவர்கள் மெயில் பத்திரிகையில்......

திரு. மு. கருணாநிதி: ''மெயில் பத்திரிகையில் வந்திருப் பதாக சுப்பு அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள இந்த வாசகங்களை'' என்று இருந்தால் சரியாக இருக்கும்.

1979 பிப்ரவரி 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுப்பு அவர்கள் சுட்டிக் காட்டிய மெயில் பத்திரிகையில் பிரசுரித்துள்ள வாசகங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு இப்பிரச்சினையில் அவை உரிமைமீறிய செயல் எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமைப் பிரச்சினை ஒன்றைக் கொண்டு வர அனுமதி கேட்டுள்ளார்கள். அப்பிரச்சினை குறித்து அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

Thiru K. SUPPU: Mr. Speaker, Sir, under rule 184 of the Assembly Rules, I am giving Notice to raise the following matter of privilege against the Hon. Minister for Health, viz.

"On 12-9-1978 the Hon. Minister for Health gave reply to Question No. 173 on the floor of the Assembly. In this reply, the Hon Minister has specifically admitted the fact to the effect that one Dr. Udhayashankar has cheated the Director of Medical Education and also the Government of Tamil Nadu by suppressing certain material particulars for seeking admission to M.D. (Preventive Medicine). He has managed to get appointment as Health officer in Madras Medical college during the period of his studies. He has been drawing a monthly salary and allowances to the tune of Rs. 1,200/- for the said post without attending to the work. The candidate is none-else than the son of an Assistant Director of public Health. When the quession was raised through a starred question, the Hon. Minister admitted the facts and assured the House that action was being taken against the concerned persons. But the fact remains otherwise. The Hon. Minister has led the House to believe that appropriate action would be taken against the persons concerned whereas no such action was taken against them. This will amount to misleading the House and shielding the culprits. Therefore, the matter may be referred to the Committee of Privileges."

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விசாரணையில் இருந்து கொண்டிருக்கிறது என்று இப்போதும் இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இப்பிரச்சினை குறித்து என்னுடைய தீர்ப்பைப் பின்னால் அறிவிக்கிறேன்,